# குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலைத் தடுத்தல்

## ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கையேடு

**பள்ளிக் கல்வித்துறை**
**தமிழ்நாடு அரசு**

CSA_Module.indd 1 11/25/2024 2:25:54 PM

**தமிழ்நாடு அரசு**

முதல்பதிப்பு – 2024

## ஆசிரியர் கையேடு
## உருவாக்கமும் தொகுப்பும்

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்**

© SCERT 2024

## நூல் அச்சாக்கம்

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in

# பொருளடக்கம்


| வ.எண். | பாடப்பொருள் | ப.எண். |
|---|---|---|
| 1 | குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களைப் புரிந்துகொள்ளுதல் | 1 |
| 2 | குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களைத் தடுக்கும் சட்டம் (போக்சோ 2012) – ஒரு பார்வை | 7 |
| 3 | குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் – வெளிப்படுத்துதலைக் கையாளுதல் | 12 |
| 4 | குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களைக் கையாளுபவர்களுக்கான விழிப்புணர்வு | 17 |




CSA_Module.indd 3 11/25/2024 2:25:54 PM

CSA_Module.indd 4 11/25/2024 2:25:55 PM



# 1

# குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களைப் புரிந்துகொள்ளுதல்

## அறிமுகம்

### குழந்தைகளைப் பாதுகாத்தல்

குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களைத் தடுக்கும் சட்டம் (POCSO 2012) குறித்தும் குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் சார்ந்தும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் பொறுப்புணர்வை மேம்படுத்துவதே இக்கட்டகத்தின் முக்கிய நோக்கமாகும்.

குழந்தைகளின் பாதுகாப்பை அக்கறையுடன் உறுதிசெய்தலே ஆசிரியர்களின் முதற்கடமையாகும். இக்கடமையைப் போக்சோ (POCSO) சட்டம் உறுதிப்படுத்துகிறது. ஆசிரியர்கள் தங்கள் பாதுகாப்பில் உள்ள குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டால், அச்சூழலை எதிர்கொள்ளத் தேவையான பாலியல் துன்புறுத்தல் சார்ந்த தகவல்களை முன்னரே அறிந்து தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

#### நோக்கங்கள்

- குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ளல்.
- குழந்தைகள் மீதான துன்புறுத்தல் மற்றும் அதன் வகைகளை அறிதல்.
- பல்வேறு சூழல்களில் போக்சோ சட்டத்தை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளல்.
- குழந்தைகள், தங்கள் மீதான பாலியல் துன்புறுத்தலை வெளிப்படுத்தும்போது அதை எவ்வாறு கையாள்வது என்பதை அறிந்து கொள்ளல்.
- குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கினை உணர்தல்.



CSA_Module.indd 1 11/25/2024 2:25:55 PM

## குழந்தைகள் மீதான துன்புறுத்தல்

குழந்தைகளை அடித்தல், திட்டுதல், குழந்தைகளின் உடல், உணர்வு அல்லது சிந்தனைகளைக் காயப்படுத்துதல் மற்றும் பாலியல் சீண்டல் ஆகிய எந்தவொரு செயலும் குழந்தைகள் மீதான துன்புறுத்தல் ஆகும்.

## குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுபவர்கள்

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவோரை எந்த ஒரு பிரிவு / வகையினராகவும் குறிப்பிட்டுக் கூற இயலாது. அவர்கள் எந்த ஒரு வகுப்பு, சாதி, மதம், இனத்தைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். இச்செயலில் ஈடுபடுபவர் ஆணாகவோ, பெண்ணாகவோ, மூன்றாம் பாலினத்தவராகவோ அல்லது குழந்தையாகவோ கூட இருக்கலாம். மேலும், அவர்கள் நெருங்கிய உறவினராகவோ, நண்பராகவோ, உடன் பயில்பவராகவோ, உடன் பணிபுரிபவராகவோ, உடன் பயணிப்பவராகவோ சமுதாயத்தில் எந்த ஓர் அங்கத்தினராகவும் இருக்கலாம். இந்தப் பட்டியலில் இருந்து யாரும் விதிவிலக்கல்ல.

## எந்தக் குழந்தை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும்?


பதினெட்டு வயதுக்குட்பட்ட எந்த ஒரு குழந்தையும் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் மிக அதிகம். துன்புறுத்தலுக்கு உள்ளாகும் குழந்தை எந்த பாலினத்தைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். அந்த குழந்தை பணக்கார குடும்பத்திலோ, ஏழ்மையான குடும்பத்திலோ, தங்கள் பெற்றோரிடமோ அல்லது தனியாக வசிக்கக் கூடியவராகவோ, விடுதியில் தங்கி படிக்கும் குழந்தையாகவோ, கல்வி நிறுவனங்களில் பயிலும் குழந்தையாகவோ, பிற இடங்களில் வசிக்கும் குழந்தைகளாகவோ கூட இருக்கலாம். பாலினப்பாகுபாடின்றி எந்த வயதிலும் ஒரு குழந்தை, பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் உண்டு.

**பாலியல் துன்புறுத்தல் சார்ந்த மாயைகளும் உண்மைகளும்**

| வ.எண் | மாயைகள் | உண்மைகள் |
|---|---|---|
| 1 | பெற்றோர்கள் குழந்தைகளிடம் அன்பு காட்டாதபோதும் புறக்கணிக்கும் போதும் மட்டுமே குழந்தைகள் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். | பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை உண்மையாக அன்பு காட்டி நல்வழிப்படுத்தினாலும் கூட அக்குழந்தைகள் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் உள்ளன. |
| 2 | பெண்களால், பெண் அல்லது ஆண் குழந்தையை, பாலியல் துன்புறுத்தல் செய்ய இயலாது. | பாலியல் செயலில் ஈடுபடுவோர் மற்றும் பாதிக்கப்படுபவர்கள் எந்த ஒரு பாலினத்தைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். அனைத்து வகையான பாலியல் துன்புறுத்தல்களும் குற்றமாகும். |
| 3 | நெருங்கிய உறவினராக உள்ள ஒருவர் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட மாட்டார். | பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளுக்கு உறவினராகவோ, தெரிந்தவராகவோ, நம்பிக்கைக்கு உரியவராகவோ இருப்பர். |
| 4 | முறையான நெறிப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு இல்லாத சூழலிலுள்ள குழந்தைகள் மட்டுமே பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவர். | பெற்றோர் மற்றும் சமுதாயத்திடம் குழந்தைகளை (ஆண் / பெண் / மூன்றாம் பாலின/மாற்றுத்திறன் குழந்தைகள்) முறையாக நெறிப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு இருந்தபோதும் குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் நிகழலாம். |



CSA_Module.indd 2 11/25/2024 2:25:55 PM




## துன்புறுத்தலின் வகைகள்

துன்புறுத்தல் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றன. அவை குழந்தைகளுக்கு பல்வேறு தீங்குகளை விளைவிக்கின்றன. துன்புறுத்தல் நான்கு வகைப்படும்.

## 1 உடல் ரீதியான துன்புறுத்தல்

குழந்தைகளுக்கு உடல் ரீதியான துன்புறுத்தலை ஏற்படுத்துபவர் நெருங்கிய உறவினராகவோ, நண்பராகவோ, உடன் பயில்பவராகவோ, உடன் பயணிப்பவராகவோ சமுதாயத்தில் எந்த ஓர் அங்கத்தினராகவும் இருக்கலாம்.

**குழந்தைகளின் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கான அறிகுறிகள்:**

- உடலில் கடுமையான காயங்களை ஏற்படுத்துதல்
- சூடு வைத்தல்
- குழந்தைகளிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளல்
- உடலில் வடுக்களை ஏற்படுத்துதல்
- கை, கால்களில் வீக்கத்தை உண்டாக்கி துன்புறுத்துதல்
- தலை முடியை சேதப்படுத்துதல்

## 2 உணர்வு ரீதியான துன்புறுத்துதல்/ மனவெழுச்சி துன்புறுத்துதல்

குழந்தையின் மன உணர்வுகளைச் சொற்களால் காயப்படுத்துதல் அல்லது கட்டுப்படுத்துதல். இது மனவெழுச்சி துன்புறுத்துதல் அல்லது சொற்சீண்டல் அல்லது உணர்வு ரீதியான துன்புறுத்துதல் எனப்படும். சொற்சீண்டல் செய்வதால் ஒரு குழந்தை தன்னைத் தாழ்ந்தவராகவும் கெட்டவராகவும் உணரச் செய்வதுடன் வருத்தத்தையும் ஏற்படுத்தும்.

**மனவெழுச்சி துன்புறுத்துதல் / சொற்சீண்டல் அறிகுறிகள்:**

- தன்னம்பிக்கை இல்லாமல் இருத்தல்
- பிறரிடம் மிகக் குறைவாக பேசுதல் அல்லது பேசாமலே இருத்தல்
- எதைச் சொல்வதற்கும் மிகுந்த பயம்
- உணர்வுகளைத் தங்களுக்குள்ளாகவே அடக்கிக் கொள்ளுதல்
- உணர்வுகளை மிகைப்படுத்திக் காட்டுதல்
- திடீரென சத்தமாகவும் கோபமாகவும் பேசுதல்
- பிற குழந்தைகளைத் தவறாக கூறி கிண்டல் செய்தல்.



CSA_Module.indd 3 11/25/2024 2:25:55 PM

## 3 புறக்கணித்தல்

புறக்கணித்தல் என்பது பிறவகை துன்புறுத்துதலில் இருந்து வேறுபட்டதாகும். துன்புறுத்துதலின் பிற வகைகளில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உடல் அல்லது மனரீதியான துன்புறுத்தல்களில் ஈடுபடுவர். ஆனால் புறக்கணித்தலில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் குழந்தைகளின்மீது அன்பும் அக்கறையும் செலுத்தாமல் இருப்பர்.

**குழந்தைகள் புறக்கணிக்கப்படுதலின் அறிகுறிகள்:**

- நீண்டகால உடல்நலக் குறைவு மற்றும் சோர்வுடன் இருத்தல்.
- வருத்தம் நிறைந்த தோற்றம் உடையவராய் இருத்தல்.
- இயல்புக்கு மாறாக மற்றவர்களிடமிருந்து விலகி இருத்தல்.
- பள்ளியில் கல்விசார் செயல்பாடுகளில் திறன் குறைந்தவர்களாய் இருத்தல்.
- தன் சுத்தம் பேணுவதில் ஈடுபாடின்மை.
- நண்பர்களிடமும் பிறரிடமும் தனக்கென ஓர் ஆதரவு இல்லாதது போல் உணர்தல்.
- குணப்படுத்தப்படாத காயம் / நோயுடன் இருத்தல்.

## 4 பாலியல் துன்புறுத்தல்

குழந்தை மீதான பாலியல் துன்புறுத்தல் என்பது, குழந்தைகள் பாலியல் தொடர்பான புரிதல் இல்லாத நிலையிலும் விவரம் புரியாமல் மறுக்க இயலாத நிலையிலும் குழந்தை உடல் முழு வளர்ச்சியடைந்து தயாராகாத நிலையிலும் சட்டத்திற்கும் சமுதாயத்திற்கும் புறம்பான வகையில் அவர்களைப் பாலியல் செயல்களில் ஈடுபடுத்துதல் ஆகும். குழந்தைகளைவிட வயது, அதிகாரம், பொறுப்பு, நம்பிக்கை முதலியவற்றில் மேம்பட்டவர்கள் தனது உடல் மற்றும் உளத்தேவைகளுக்காக ஒரு குழந்தையை பாலியல் சீண்டல் செயல்களில் ஈடுபடுத்துதல் குழந்தை மீதான பாலியல் துன்புறுத்தல் ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் பாலியல் துன்புறுத்தலில் அடங்கும். ஆனால், இவை மட்டுமே இறுதியானவை அல்ல.

- சட்டத்திற்குப் புறம்பாகக் குழந்தைகளைப் பாலியல் செயல்களில் ஈடுபட தூண்டுதல் மற்றும் வற்புறுத்துதல்.
- குழந்தைகளிடம் தன்னை ஆபாசமாக காட்சிப்படுத்திக் கொள்வது / படக்காட்சிகளைக் காண்பித்து அவர்களைப் பாலியல் சுரண்டலில் ஈடுபடுத்துதல்.

## குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலின் தாக்கம்

- பாலியல் துன்புறுத்தல் என்பது ஒரு குழந்தை எதிர்கொள்ளும் மிகவும் அதிர்ச்சிகரமான அனுபவங்களில் ஒன்றாகும்.
- பாலியல் துன்புறுத்தலுக்குப் பின் ஒரு குழந்தையின் உள, சமூக வளர்ச்சி தடைபடுகிறது.
- ஒரு குழந்தை தன் வலிமிகுந்த நினைவுகள் மற்றும் உணர்வுரீதியான வலிகளை தவிர்க்கும்பொருட்டு மறுத்தல், நினைவுகளை மனதிற்குள்ளேயே புதைத்தல், சுய தீங்கு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுதல் போன்ற தவறான சமாளிக்கும் முறைகளில் (Poor Coping Pattern) ஈடுபடுதல்.



CSA_Module.indd 4 11/25/2024 2:25:55 PM

- இதனால் குழந்தைகள் தங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான காலகட்டங்களிலும் அதிர்ச்சியான மனநிலையிலேயே வாழ வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுதல்.
- வஞ்சிக்கப்படுதல், துன்பப்படுதல் போன்ற கசப்பான அனுபவங்கள் ஒரு குழந்தையின் நம்பிக்கையைச் சிதைக்கின்றன.
- பாலியல் துன்புறுத்தலானது குழந்தை மற்றும் அதன் குடும்பத்தினரிடையே நீண்ட கால எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

## உடல் தொடர்புடைய பாலியல் குற்றங்கள் மற்றும் உடல் தொடர்பற்ற பாலியல் குற்றங்கள்

| உடல் தொடர்புடைய பாலியல் குற்றங்கள் | உடல் தொடர்பற்ற பாலியல் குற்றங்கள் |
|---|---|
| 1. குழந்தையைத் தகாத முறையில் தொடுதல். | ஒருவர் காண்பிக்கக் கூடாத தன் உடல் பாகங்களைக் குழந்தைகளுக்குக் காண்பித்தல். |
| 2. ஒரு குழந்தையை வேறு ஒரு நபரைத் தகாத முறையில் தொடத் தூண்டுதல். | பாலியல் உணர்வுகளைத் தூண்டும் படங்களைக் காண்பித்தல் |
| 3. வலுக்கட்டாயமாக ஒரு குழந்தைக்கு முத்தம் கொடுத்தல் | ஆபாசமான நகைச்சுவைத் துணுக்குகளை அல்லது கதைகளைக் கூறுதல் |
| 4. ஒரு குழந்தையுடன் பாலியல் உறவு கொள்ளுதல். | குழந்தை உடை மாற்றுவதை அக்குழந்தைக்கு தெரிந்தோ / தெரியாமலோ பார்த்தல். |
| 5. ஒரு குழந்தையை, தன்னையோ அல்லது பிறரையோ தகாத முறையில் தொடுவதற்குக் கட்டாயப்படுத்துதல். | பாலியல் செயலுக்கான சைகை செய்தல் அல்லது காண்பித்தல். |

பாலியல் துன்புறுத்தல் நிகழ்ந்ததை வெளிக்காட்டும் வகையில் நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள்.

1. திடீரென ஏற்படும் விளக்க இயலாத முரட்டுத்தனம் அல்லது ஒதுங்கி இருத்தல்.
2. சுயகாயப்படுத்துதல் அல்லது தனது உடலைத்தானே முடமாக்குதல்.
3. போதைப்பொருளைப் பயன்படுத்துதல்.
4. தனியாக ஒரு நபரிடம் அல்லது ஒரு குழுவிடம் மாட்டிக் கொள்வோம் எனும் அச்ச உணர்வு.
5. படுக்கையில் சிறுநீர் கழித்தல், தூக்கத்தில் பயங்கரமான கனவுகள் கண்டு விழித்தல்.
6. அதிகமாக உணவு உண்ணுதல் அல்லது பசியின்மை.
7. முரட்டுத்தனமான நடத்தை / பயம் / பாலியல் தொடர்பான படம் வைத்திருத்தல்.
8. வயது மற்றும் உடல் வளர்ச்சிக்கு மீறி பாலியல் பற்றி அறிந்திருத்தல்.
9. வீட்டை விட்டு வெளியேறுதல்.



CSA_Module.indd 5 11/25/2024 2:25:55 PM

## தயார்படுத்துதல்:

பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடும் கயவர்கள், பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் குழந்தைகள் / நபர்களை பாலியல் செயலில் ஈடுபட வைப்பதற்கு மேற்கொள்ளும் வழிமுறைகளையே "பாலியல் செயலுக்கு தயார்படுத்துதல்" என்கிறோம்.

குழந்தைகளைப் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுத்தும் கயவர்கள் பெரும்பாலும் அவர்கள் விரும்புவதைச் [கைபேசி வாங்கித் தருதல், விரும்பிய உணவு / உடை வாங்கித் தருதல், பணம் அளித்தல், வீட்டிற்கு வாகனத்தில் அழைத்துச் செல்லல்] செய்துதர பெறும் முயற்சி எடுப்பவர்களாகவே இருக்கின்றனர்.

ஆசிரியர் குழந்தையின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஒரு குழந்தை பாலியல் துன்புறுத்துதல் குறித்து புகார் அளிக்க ஏதுவாக பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டும். பாலியல் துன்புறுத்தல் நிகழ்வுகள் உணர்வுரீதியானவை. எனவே அவற்றைக் கவனமுடன் கையாள வேண்டும்.






CSA_Module.indd 6 11/25/2024 2:25:55 PM

2

# குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களைத் தடுக்கும் சட்டம் (போக்சோ 2012) – ஒரு பார்வை



## போக்சோ சட்டம்

பாலியல் தாக்குதல், பாலியல் வன்கொடுமை மற்றும் ஆபாச படங்களைப் பார்க்கச் செய்தல் / ஈடுபடுத்துதல் போன்ற குற்றங்களிலிருந்து குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முழுமையான சட்டம், போக்சோ சட்டம் 2012 ஆகும். போக்சோ சட்டத்தின்படி 18 வயதிற்குட்பட்ட அனைவரும் குழந்தைகள் என கருதப்படுவர். இச்சட்டம் 18 வயதிற்குட்பட்ட அனைத்துப் பாலினத்தவருக்கும் பொதுவானது. அதாவது பாதிக்கப்பட்டவர் ஆண், பெண், மூன்றாம் பாலினத்தவராக இருக்கலாம்.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது முதல் வழக்கு நடைபெற்று முடியும் வரை ஒவ்வொரு நிலையிலும் குழந்தையை இச்சட்டம் பாதுகாப்பதுடன் சிறப்பு நீதிமன்றங்களில் புகார் அளித்தல், ஆதாரங்களைப் பதிவு செய்தல் மற்றும் விசாரணையின் ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளைப் பாதுகாப்பதாக இச்சட்டம் அமையும்.



### போக்சோ சட்டத்தின்படி பாலியல் குற்றம் என்றால் என்ன?

போக்சோ சட்டத்தின்படி ஒருவர் குழந்தையைப் பாலியல் உறவில் ஈடுபடச் செய்தல் / ஒருவர் பாலுறவில் தானே ஈடுபடாவிட்டாலும் அவர் மற்றொரு குழந்தையை / நபரை இச்செயலில் ஈடுபடுத்தினாலும் அவர் தண்டனைக்குரியவர் ஆகிறார்.

போக்சோ சட்டம் பாலியல் குற்றங்கள் சார்ந்த வரையறையை விரிவுபடுத்துவதோடு மட்டுமின்றி குழந்தைகளை ஆபாசப் படங்களில் பயன்படுத்துவதையும் தடை செய்கிறது.



CSA_Module.indd 7 11/25/2024 2:25:55 PM

மேலும் இச்சட்டம் குழந்தையைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட ஆபாசப் படங்களைச் சேமிப்பதையும் தண்டனைக்குரிய ஒன்றாக குறிப்பிட்டு குழந்தைகளின் பாதுகாப்பை அதிகரிக்கிறது.

## கடுமையான தண்டனைக்கு உள்ளாகும் நபர்கள்

காவல் துறையினர், இராணுவத்தினர், அரசு ஊழியர், காப்பாளர், மருத்துவமனை, கல்வி அல்லது மதம் சார்ந்த நிறுவனங்களின் பணியாளர்கள், உறவினர்கள் போன்ற குழந்தையின் நம்பிக்கைக்கு உரியவர்கள் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டால் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர்.

## கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகள்

கொடிய ஆயுதங்கள், நெருப்பு, சூடான அல்லது துருப்பிடித்த பொருள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி குழந்தையைத் துன்புறுத்துதல், ஒரு குழந்தையைக் கருவுறச்செய்தல், ஒரு குழந்தையை HIV பாதிப்பிற்கு உள்ளாக்குதல் அல்லது உயிருக்கு ஆபத்தான நோய்கள் போன்றவற்றை ஏற்படுத்தி குழந்தையின் இறப்புக்குக் காரணமாக இருத்தல்.

## கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கும் சூழல்

குற்றச் செயலில் மீண்டும் மீண்டும் ஈடுபடுதல், மனநலக் குறைபாடுடைய / மாற்றுத்திறனாளி குழந்தைகள், 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பாலியல் துன்புறுத்தல் ஏற்படுத்துதல். இயற்கை சீற்றங்களின் போது / பிரிவினைவாத வன்முறையின்போது குழந்தைக்கு பாலியல் துன்புறுத்தலால் மரணம் ஏற்படுத்த முயற்சி செய்தல்.

### போக்சோ சட்டத்தில் குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகள்

- ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தைமைய சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தல். நம்பிக்கைக்கு உரிய ஒரு குடும்ப உறுப்பினர், பாதுகாவலர், நண்பர் அல்லது உறவினரை அனுமதித்து சிறப்பு நீதிமன்றம் மூலம் குழந்தைமைய சூழ்நிலையை உருவாக்கலாம்.
- பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான குழந்தை தனக்கு விருப்பப்பட்ட சட்ட ஆலோசனை அல்லது இலவச சட்ட உதவியைப் பெற உரிமை உள்ளது. தன்னுடைய வழக்கில் குற்றப்பத்திரிக்கையின் நகலைப் பெற குழந்தைக்கு உரிமை உள்ளது.
- நீதிமன்றம் அறிவித்த நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் முழு விசாரணையை முடிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.
- குழந்தை, காவல்துறை அல்லது நீதிபதியிடம் புகார் அளிக்கும்போது அல்லது நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும்போது குற்றம் சாட்டப்பட்டவரை நேருக்குநேர் பார்க்கக்கூடாது.
- விசாரணையின் முன்னும் விசாரணையின்போதும் குழந்தைக்கு மொழிபெயர்ப்பாளர், விளக்கம் அளிப்பவர், சிறப்பு ஆசிரியர்கள், வல்லுநர்கள், ஆதரவாளர்கள் போன்ற பிற சிறப்பு ஆதரவுகள் வழங்கப்பட வேண்டும்.
- விசாரணையின்போது குழந்தையிடம் மூர்க்கத்தனமான கேள்விகளைக் கேட்கக் கூடாது. விசாரணை நடக்கும்போது தேவைப்படும் நேரங்களில் இடைவேளை வழங்கப்படலாம்.
- குழந்தை நலக்குழு தகுதியான வழக்குகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உணவு, உடை, போக்குவரத்து போன்ற அத்தியாவசியமான தேவை மற்றும் பிற செலவினங்களுக்காக சிறப்பு நிவாரணம் அளிக்க பரிந்துரைக்கலாம்.
- விசாரணையின்போது மருத்துவ சிகிச்சை, ஆலோசனை போன்ற அவசரத் தேவைகளுக்காக பாதிக்கப்பட்டக் குழந்தைகளுக்கு இடைக்கால இழப்பீடு வழங்கப்படலாம்.
- விசாரணையின் முடிவில் சரியான மறுவாழ்வு அளிப்பதை உறுதி செய்யும் வகையில் பாதிக்கப்பட்டக் குழந்தைகளுக்கு இறுதி இழப்பீடு வழங்கலாம்.



CSA_Module.indd 8 11/25/2024 2:25:55 PM

## குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் பற்றி அறிந்தவுடன் மேற்கொள்ள வேண்டிய சட்ட வழிமுறைகள்

1. **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல்** (First Information Report-FIR)
2. **மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துதல்**
3. **பாதிக்கப்பட்ட குழந்தையின் வாக்குமூலத்தை நீதிபதியின் முன் பதிவு செய்தல்**
4. **குழந்தைகள் நல குழுவினரின் முன் நிறுத்துதல்**

   பாதிக்கப்பட்ட குழந்தையை உரிய குழந்தைகள் நலக்குழுவின் (Child Welface Committee - CWC) முன் நிறுத்துதல் காவல் துறையின் கடமையாகும். இக்குழு கல்வி, மருத்துவம், உளவியல் மற்றும் மறுவாழ்வு ஆகிய குழந்தைகளின் தேவைகளை ஆராயும்.

   இக்குழு குழந்தையை உற்றுநோக்கியதன் அடிப்படையில் குழந்தை மற்றும் அக்குழந்தையின் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்ய உதவியாளர் ஒருவரை நியமிக்கும்.

5. **விசாரணை**

   முதல் தகவல் அறிக்கையின் (FIR) அடிப்படையில் உரிய விசாரணை அலுவலர் விசாரணையைத் தொடங்க வேண்டும். குற்றம் தொடர்பான வாக்குமூலங்களைப் பாதிக்கப்பட்ட குழந்தை, சாட்சி, குடும்ப உறுப்பினர்கள், அண்டை-அயலார், காவல்துறையினர் ஆகியோரிடமிருந்து தகவல்களைப் பெற்று விசாரணை அலுவலர் பதிவு செய்ய வேண்டும்

6. **விசாரணை மற்றும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தல்:**

   விசாரணை முடிவுற்ற பின், விசாரணை அலுவலர் சிறப்பு நீதிமன்றத்தின் முன் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்வார். சாட்சியின் வாக்குமூலங்கள், மருத்துவ ஆவணங்கள், வயது சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பெறப்பட்ட ஒட்டுமொத்த விசாரணை அறிக்கையினைக் குற்றம் சாட்டப்பட்டவர் மீது தாக்கல் செய்வார். மேலும், நடவடிக்கை எடுக்க வேண்டிய சட்டப் பிரிவுகள் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

7. **தண்டனைகளை வரையறுத்தல்**

   இந்நிலையில், கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் குற்றப் பத்திரிக்கையின் அடிப்படையில் அரசு வழக்கறிஞர், பாதிக்கப்பட்டவர் / புகார் அளித்தவரின் வழக்கறிஞர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் ஆகியோர் சிறப்பு நீதிமன்றத்தின் முன் வாதிடுவர். பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்டவர் மீது எந்தெந்த சட்டப்பிரிவுகளின் கீழ் தண்டனை வழங்கலாம் என்பது குறித்து முறையீடு செய்வார்.

8. **குழந்தையின் சாட்சி**

   பாதிக்கப்பட்ட குழந்தையை, சாட்சியம் கூற நீதிமன்றத்தின் முன் நிறுத்துவர். அரசு வழக்கறிஞர் அக்குழந்தைக்கு ஏற்பட்ட நிகழ்வு பற்றிய வினாக்களைக் கேட்டு விசாரணை செய்வார். அதன்பின், குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞரும் பாதிக்கப்பட்ட குழந்தையிடம் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்படும். இந்த நிலையில் சிறப்பு நீதிமன்றம் குழந்தைக்குத் தேவைப்பட்டால் ஒரு மொழிபெயர்ப்பாளரையோ அல்லது சிறப்பு ஏதுவாளரையோ நியமிக்கும்.

**9. ஆதாரங்களின் சாட்சி**

வழக்கின் பிற சாட்சிகளின் வாக்கு மூலங்கள் / சான்றுகள்:

குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் நீதிமன்றத்திற்கு அழைக்கப்படுவார்கள். பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞரும் குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞரும் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்து வாக்குமூலங்களைப் பெறுவர். குடும்ப உறுப்பினர்கள், புகாரளிக்க உதவி புரிந்தவர்கள், பள்ளியின் தலைமை ஆசிரியர் (பள்ளி ஆவணத்தின் படி பாதிக்கப்பட்ட குழந்தையின் வயது சான்றிதழை வழங்குபவர்) ஆகியோர் சாட்சிகளாவர்.

**10. குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம்**

வழக்கு விசாரணை முடிவுற்ற பின், குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்படும். குற்றம் சாட்டப்பட்டவர் தன் மீது சுமத்தப்பட்டுள்ள புகார் குறித்து விளக்கம் அளிக்க வாய்ப்பு வழங்கப்படும். இறுதி தீர்ப்பு வழங்கும் தருவாயிலும் குற்றம் சாட்டப்பட்டவர் தன்னிலை விளக்கமளிக்க, மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப்படும்.

**11. எதிர் தரப்பு ஆதாரம் / வாக்குமூலம்**

குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து வாக்கு மூலம் பெற்ற பின்பு, அவருடைய வாதத்திற்கு வலுசேர்க்கும் வகையில் வேறு ஏதேனும் சாட்சிகளையோ அல்லது ஆதாரங்களையோ முன்னிலைப்படுத்த / வழங்க வாய்ப்பு வழங்கப்படும். பாதிக்கப்பட்டவர்களின் வழக்கறிஞருக்கு, குற்றம் சாட்டப்பட்டவர் கொண்டுவந்த சாட்சிகளையோ / ஆதாரங்களையோ குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்படும்.

**12. இறுதி வாதங்கள்**

சிறப்பு நீதிபதி, அனைத்து தரப்பு வாதங்களைக் கேட்டறிந்து ஆதாரங்களைப் பெற்ற பின்பு, அரசு வழக்கறிஞர், எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆகியோரின் இறுதி வாதத்தைக் கேட்டறிவார். இவ்விரு தரப்பு வழக்கறிஞர்களும் தங்களுடைய இறுதி வாதங்களை எழுத்துப்பூர்வமாக சிறப்பு நீதிபதியிடம் ஒப்படைப்பர்.

**13. நீதிமன்ற ஆணை / தீர்ப்பு**

இறுதியாக வாக்குமூலங்கள் மற்றும் வாதங்கள் மூலம் பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில், சிறப்பு நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவரைத் தண்டித்தோ, விடுவித்தோ ஆணை வழங்குவார். குற்றம் சாட்டப்பட்டவர் தண்டனைக்குரியவராக இருப்பின் சிறப்பு நீதிமன்றம் குற்றத்திற்கு உரிய தீர்ப்பை வழங்கும்.



**14. இறுதி இழப்பீடு**

வழக்கின் தீர்ப்பு எதுவாயினும், பாதிக்கப்பட்ட குழந்தைக்கு இறுதி இழப்பீடு வழங்க சிறப்பு நீதிமன்றம் ஆணையிடும். (இது இடைக்கால இழப்பீடு முறையை ஒத்து அமையும்).



CSA_Module.indd 10 11/25/2024 2:25:56 PM

இறுதி இழப்பீடு வழக்கின் முடிவில் வழங்கப்படும். ஆனால் இடைக்கால இழப்பீடு பாதிக்கப்பட்ட குழந்தையின் தேவைகளைப் பொறுத்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் எந்த நிலையிலும் வழங்கப்படும்.

15. **சாட்சிகளைப் பாதுகாத்தல்**

பாதிக்கப்பட்ட குழந்தைக்கோ, குழந்தையின் குடும்ப உறுப்பினர்களுக்கோ குற்றம் சாட்டப்பட்டவரால் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களால் அச்சுறுத்தல் ஏற்படும் நிலையில், பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புக்கோரி சிறப்பு நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம்.

16. **பிணை (ஜாமின்)**

வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது குற்றம் சாட்டப்பட்டவர் ஜாமீன் கோரி விண்ணப்பிக்க உரிமை உண்டு. ஜாமீன் நடவடிக்கையின்போது பாதிக்கப்பட்டவரோ அல்லது அவருடைய பிரதிநிதியோ உடனிருக்க உரிமை உண்டு. குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஜாமின் கிடைக்கும் நிலையில் குறிப்பிட்ட சட்ட விதிமுறைகளை அவர் பின்பற்ற வேண்டும்.

**சட்ட விதிமுறைகள் பின்வருமாறு:**

பாதிக்கப்பட்டவர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களை அச்சுறுத்தவோ அதிகாரம் செலுத்தவோ, தொடர்புகொள்ளவோ கூடாது. குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணை அலுவலரின் அனுமதியின்றி ஊரை விட்டோ நாட்டை விட்டோ செல்லக்கூடாது.

17. **இடைக்கால இழப்பீடு**

இந்நிகழ்வில், தீர்ப்புக்கு முன்னர் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் எந்த நிலையிலும் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு இழப்பீடு தேவைப்பட்டால், சிறப்பு நீதிமன்றத்தில் இடைக்கால இழப்பீடு கோரி விண்ணப்பிக்கலாம். சிறப்பு நீதிபதி அக்குழந்தையின் தேவை குறித்து விசாரணை செய்ய விசாரணை அலுவலருக்கு வழிகாட்டுவார். அதன் அடிப்படையில் சிறப்பு நீதிமன்றம் இடைக்கால இழப்பீட்டை அக்குழந்தைக்கு வழங்கும். நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட தொகை அக்குழந்தையின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இந்த இடைக்கால இழப்பீடு பாதிக்கப்பட்ட குழந்தையின் கல்வி, மருத்துவம், உளவியல் மற்றும் மறுவாழ்வு சார்ந்த தேவைகளுக்காக வழங்கப்படுகிறது.

## செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை:

### ஊடகம், காவல்துறை, மருத்துவரிடம் எதிர்பார்க்கப்படும் செயல்கள்

சட்டப்படி பாலியல் குற்றத்தைக் காவல்துறையிடம் புகார் அளிப்பது கட்டாயமாகும். புகார் அளிக்காமல் இருப்பது தெரிந்தே செய்யக்கூடிய ஒரு குற்றமாகும். பாலியல் குற்றம் இழைக்கப்பட்ட குழந்தையின் அடையாளத்தை ஊடகம் அல்லது ஏதேனும் ஒருநபர் அல்லது அமைப்புகள் மூலமாக வெளியிடக்கூடாது. இது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும். மருத்துவ பரிசோதனை, காவல்துறையிடம் புகார் பதிவு செய்தல், நீதிமன்றத்தில் விசாரணை செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும்போது குழந்தைமைய அணுகுமுறைகளைப் பின்பற்ற பரிந்துரைக்கப்படுகிறது.



CSA_Module.indd 11 11/25/2024 2:25:56 PM



# 3

# குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் – வெளிப்படுத்துதலைக் கையாளுதல்

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் என்பது குழந்தையை விட வலிமையான நபர் தன்னுடைய பாலியல் நோக்கத்துக்காக குழந்தையைப் பயன்படுத்தும் ஒரு செயல் ஆகும். இந்த வரையறையில் உள்ள நான்கு முக்கிய கூறுகள்:

- துன்புறுத்தும் ஒரு செயல்
- குழந்தை
- பாலியல் நோக்கம்
- வலிமையான நபர்

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் என்பது உள்நோக்கம் உடையது; தற்செயலானது அல்ல. வெளிப்படுத்துதல் என்ற சொல் குழந்தைகள் தங்களுக்கு நிகழ்ந்த பாலியல் துன்புறுத்தலை நம்பகமான பெரியவர்களிடம் தெரிவித்தலைக் குறிக்கிறது. குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் வெளிப்படுத்தப்பட்டபின், அதற்கேற்ப திறம்பட எதிர்வினையாற்ற சில திறன்கள் தேவைப்படுகின்றன.

## வெளிப்படுத்துதல்: வரையறைகள் மற்றும் வகைகள்

குழந்தைகளுக்கு தாங்கள் எதிர்கொண்ட பாலியல் துன்புறுத்தல்களைப் பகிர்ந்துகொள்வது ஒரு கடினமான செயல் ஆகும். அவர்கள் என்ன நடந்தது என்பதைப்பற்றி, பல வாரம், பல மாதம் மற்றும் பல வருடங்கள் ஆனாலும் முழுமையாக பகிர்ந்துகொள்ள மாட்டார்கள். பல குழந்தைகள் ஒருவரிடமும் அதைப்பற்றி பேசவே மாட்டார்கள்.



CSA_Module.indd 12 11/25/2024 2:25:56 PM

குழந்தைகள் தங்களுக்கு நேர்ந்த அதிர்ச்சியான சம்பவங்கள் பற்றி வெளிப்படுத்தியபின், அந்த குழந்தைகளைத் திறம்பட கையாளும் திறமையை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனால், குழந்தைகளுக்கு உடனடியாக ஆதரவும், ஆறுதலும், பாதுகாப்பும் கொடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிப்படுத்துதல் நிகழலாம்.

| நேரடியாக வெளிப்படுத்துதல் | மறைமுகமாக வெளிப்படுத்துதல் | நிபந்தனைகளின் அடிப்படையில் வெளிப்படுத்துதல் |
|---|---|---|

## நேரடியாக வெளிப்படுத்துதல்

குழந்தைகள் தங்களுக்கு நேர்ந்த துன்புறுத்தலைப் பற்றி தங்களுக்கு நம்பகமானவர்களிடம் பகிர்ந்துகொள்வதே நேரடியாக வெளிப்படுத்துதல் ஆகும். குழந்தைகள் தன் பாதுகாப்பு (உடல், பாலியல்...) குறித்த விழிப்புணர்வு பயிற்சி பெற்றிருப்பின், தங்களுக்கு நேர்ந்த பாதுகாப்பற்ற தொடுதல் / நடத்தை போன்றவற்றை நம்பகமானவரிடம் பகிர்ந்துகொள்வர்.

## மறைமுகமாக வெளிப்படுத்துதல்

இது இரண்டு வகையில் நடக்கலாம்.

அ. தற்செயலாக பகிர்ந்துகொள்வது: தன்னை அறியாமல் ஆபத்தான நிலைமையைப் பற்றி குறிப்பிடுதல்

ஆ. நேரடியாக சொல்லாமல் வேறு விதங்களில் ஒரு சில வார்த்தைகளால் குறிப்பிடுதல்.

இதற்கு காரணம் இதைப்பற்றி கேள்விப்படாததாலோ, தகுந்த வார்த்தைகள் தெரியாததாலோ, கூச்சத்தினாலோ, அதைப்பற்றி பேசமாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்ததாலோ இருக்கலாம்.

## நிபந்தனைகளின் அடிப்படையில் வெளிப்படுத்துதல்.



தனக்கு நேர்ந்த பாலியல் துன்புறுத்தலை யாரிடமும் சொல்லக்கூடாது என்ற நிபந்தனையை ஒரு குழந்தை பெரியவர்களிடம் பெற்றுக்கொண்ட பின்னரே அதனை வெளிப்படுத்தினால் அது நிபந்தனைகளின் அடிப்படையில் வெளிப்படுத்துதல் ஆகும்.

**எடுத்துக்காட்டு:** குழந்தை பின்வருமாறு கூறுதல். எனக்கு ஒரு பிரச்சனை உள்ளது. அதனை உங்களிடம் சொன்னால் நீங்கள் அதை வேறு யாரிடமும் சொல்ல மாட்டேன் என சத்தியம் செய்தால்தான் நான் அதை உங்களிடம் சொல்வேன் என கூறுதல். ஆனால் குழந்தைகளிடமிருந்து நிபந்தனைகளின் அடிப்படையில் பாலியல் துன்புறுத்தல் குறித்து தகவலைப் பெறுவது சரியானது அல்ல. ஏனெனில் அது நிச்சயம் வெளிப்படுத்த வேண்டிய புகார் ஆகும்.

## குழந்தைகள் தங்களுக்கு நடந்த பாலியல் துன்புறுத்தல் குறித்து வெளிப்படுத்தாதற்கான காரணங்கள்

குழந்தைகளின் பின்வரும் எண்ணங்களே அவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தலை வெளிப்படுத்தத் தயங்குவதற்கான காரணங்கள் ஆகும்.

- எனக்கு நடந்ததை எப்படி சொல்வது என்று தெரியவில்லை. அதை வினோதமாக உணர்கிறேன்.
- நான் யாரிடம் பகிர்ந்துகொள்வது என்று தெரியவில்லை.



CSA_Module.indd 13 11/25/2024 2:25:56 PM

- உறவினர் எனக்கு தீங்கு செய்வார் என்று நான் நினைக்கவில்லை.
- பெற்றோர் வருத்தப்படுவதை நான் விரும்பவில்லை.
- அது ஒரு விளையாட்டு என்று சொன்னார்கள்.
- அது எனக்குப் பிடித்தது.
- அந்த நபர் எனக்குப் பிடித்தமானவர்.
- இது என்னுடைய தவறு.
- இது என்னைக் காயப்படுத்தவில்லை. ஆனாலும் அசௌகர்யமாக இருந்தது.
- என்னுடைய பெற்றோர் என்னை நம்ப மாட்டார்கள்.
- என் அப்பா என்னை விட்டு சென்றுவிடுவார்.

## போதுமான ஆதரவு அமைப்புகள் குறித்த விழிப்புணர்வு இன்மை:

பெரும்பாலான நேரங்களில் குழந்தைகள் தங்களுக்குத் துன்புறுத்தல் நடந்தால் யாருடைய உதவியை நாடுவது என்பது குறித்து தெரிந்திருக்கவில்லை. இதற்குப் பல்வேறு காரணிகள் காரணமாக இருக்கலாம்.

- துன்புறுத்தல் செய்தவர் நன்கு தெரிந்தவர் அல்லது குடும்ப உறுப்பினர்.
- துன்புறுத்தல் பற்றி குழந்தை ஒருவேளை புகார் அளித்தால் எவ்வாறு உதவுவது என்று வயதில் பெரியவர்களிடம் விழிப்புணர்வு இன்மை.
- இணைய வழியிலோ அல்லது நேரடியாகவோ துன்புறுத்தல் நடந்தால் பல நேரங்களில் தனக்கு நடந்தது துன்புறுத்தல் என்பதை அறிவதில் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு இன்மை.
- குழந்தைகளுக்குப் பெருந்தொற்றுப் போன்ற காலங்களில் துன்புறுத்தல் நேர்கின்றபோது பள்ளிகள், காவல் நிலையங்களின் உதவி எண்கள், மருத்துவ வசதிகள் போன்ற உதவி செய்யக்கூடிய நிறுவனங்களை அணுக வழியில்லாத அல்லது குறைந்த அளவு வாய்ப்பு இருக்கும்போது அவர்களுக்கான ஆதரவு குறைவாக இருக்கிறது.

| | |
|---|---|
| **குழந்தை தனக்கு நேர்ந்த பாலியல் துன்புறுத்தலைக் குறித்து தெரிவிக்கும்போது நாம் அவர்களிடம் நடந்துகொள்ளும் விதத்தால் குழந்தையின் மனநிலையில் ஏற்படும் தாக்கம்** | 1. பகிர்ந்து கொள்வது உதவி கேட்பதற்கு சமமானதாகும். குழந்தை அந்த அதிர்ச்சியில் இருந்து விடுபட்டு வருவதும் மேற்கொண்டு உதவி கோருவதும் வெளிப்படுத்துதலை நாம் எவ்வாறு கையாள்கிறோம் என்பதைப் பொருத்து அமையும். |
| | 2. ஆய்வு முடிவுகளின்படி, பாலியல் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகள் முதிர்வயது வரும் வரை தங்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தலைப் பிறரிடம் தெரிவிக்காமல் தாமதம் செய்கிறார்கள் அல்லது பகிர்ந்துகொள்ளாமலே இருந்து விடுகிறார்கள். |

### வெளிப்படுத்துதலைக் கையாளுவதன் அவசியம்:

குழந்தைகளின் நடவடிக்கைகளையும் அதற்கான காரணங்களைச் சரியாகவும் திறம்படவும் ஆராய்ந்து அறிய முடியவில்லை என்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். எனவே, பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படும்



CSA_Module.indd 14 11/25/2024 2:25:56 PM

குழந்தைகள் வெளிப்படுத்தும் அறிகுறிகளைப் பற்றிய விழிப்புணர்வு ஆசிரியர்களுக்கு வேண்டும். குழந்தைகள் உணவு உட்கொள்ளும் முறை, வகுப்பறையில் செயல்படும் விதம், பள்ளிக்கு வருகை புரிதல் ஆகியவற்றில் வழக்கத்திற்கு மாறான செயல்பாடுகள், தன்னைத்தானே வருத்திக் கொள்ளுதல், தனிமையிலே இருத்தல் மற்றும் பள்ளிக்கு வருவதைத் தவிர்த்தல் போன்ற செயல்களை உற்றுநோக்கி ஆசிரியர் அவர்களிடம் தனிகவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர்கள் குழந்தைகளிடம் நம்பகமான உறவுமுறையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவை அனைத்தும் குழந்தைகள் தம்மை எவ்வித தயக்கமுமின்றி வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கும்.

**குழந்தை பாலியல் துன்புறுத்தலை ஆசிரியரிடம் வெளிப்படுத்தும்போது செய்ய வேண்டியவை:**

1. குழந்தை கூறுவதைச் செவிமடுத்துக் கேட்டல்
2. குழந்தையின் நிலையிலிருந்து அதன் உணர்வுகளைப் புரிந்து அதற்கேற்ப பதிலளித்தல்.
3. குழந்தையின் கூற்றைச் சரியான வார்த்தைகளில் பிரதிபலித்தல் (Paraphrasing)
4. உன் மீது தவறு இல்லை என குழந்தைக்கு உணர்த்துதல்
5. இரகசியம் காக்கப்படும் என உறுதியளித்தல்
6. தொடர்நடவடிக்கையில் ஈடுபடுதல், பரிந்துரை செய்தல்.

**குழந்தை ஆசிரியரிடம் நேரடியாக தனக்கு ஏற்பட்ட பாலியல் துன்புறுத்தலை வெளிப்படுத்தும்போது செய்யக்கூடாதவை**

1. பீதியடையவோ அதிக உணர்ச்சி வசப்படவோ கூடாது.
2. குழந்தைகளைக் குற்றம் சொல்லக் கூடாது.
3. குழந்தைகளைப் பகிர்ந்து கொள்ள வற்புறுத்தக்கூடாது.
4. விசாரணை செய்வது போல் கேள்வி கேட்கக்கூடாது.
5. குழந்தையின் முன்னிலையில் குற்றவாளியை எதிர்கொள்ளக் கூடாது.

**குழந்தை ஆசிரியரிடம் பகிர்ந்து கொண்டபின், உரையாடலை முடிக்கும்விதம்**

- குழந்தைக்கு நன்றி சொல்லி அதன் தைரியத்தையும், உங்கள் மீது வைத்த நம்பிக்கையையும் பாராட்ட வேண்டும்.
- மீண்டும் அம்மாதிரியான சம்பவம் ஏற்பட்டால் அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என குழந்தைக்குத் தெரிகிறதா என்று அறிந்து கொள்ள வேண்டும்.
- குழந்தையின் தற்போதைய உணர்வுநிலையையும் அறிந்து கொள்ள வேண்டும். (பாதுகாப்பாக உணர்கிறார்களா?)

தேவைப்படின் ஆசிரியரின் தகவல் தொடர்பு எண்ணைக் கொடுக்கலாம்.



CSA_Module.indd 15 11/25/2024 2:25:56 PM

### இணையவழியில் வெளிப்படுத்துதலைக் கையாளுவதில் உள்ள சவால்கள் :

தனக்கு நிகழ்ந்த பாலியல் துன்புறுத்துதலை வெளிப்படுத்துதல் என்பது குழந்தையின் தனிப்பட்ட செயலாகும். அவர்கள் தங்களுக்கு நேர்ந்த துன்புறுத்தல்களை வெளிப்படுத்தும்போது குடும்ப உறுப்பினர்கள் உடன் இருந்தால் அது தடையாக இருப்பதுடன் குழந்தைகளின் தனியுரிமைக்கு இடையூறு விளைவிக்கும். தனி இடத்தில் சென்று உரையாடுமாறு கூறினால் அதற்கும் இடவசதி தேவை என்பதால் அது முடியாமல் போகலாம்.

### உடல் மொழி வாயிலாக வெளிப்படுத்தப்படும் தகவல்கள்

குழந்தைகள் தங்கள் எண்ணங்களை பெரும்பாலும் உடல்மொழி வாயிலாக வெளிப்படுத்துகின்றனர். பொதுவாக குழந்தைகள் தங்கள் அனுபவத்தைப் பற்றி பேசும்போது அவர்கள் வெளிப்படுத்தும் உடல் மொழிகளைப் புரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் இணையவழியில் நடைபெறும் அமர்வில் குழந்தைகள் வெளிப்படுத்தும் உடல் மொழி சமிக்ஞைகளை அடையாளம் காண்பது கடினமானதாகும்.

**குழந்தையின் தனியுரிமையைப் பராமரிக்க நாம் சரிபார்க்க வேண்டியவை:**

1. நீங்கள் என்னுடன் உரையாடும்போது உங்களைச் சுற்றி யாரெல்லாம் இருக்கிறார்கள்?
2. நீங்கள் என்னுடன் பேசும்போது தனியாக இருப்பது உங்களுக்கு ஏற்றதாக இருக்குமா?
3. உங்கள் கைபேசியில் உள்ள ஒலிபெருக்கியை இயக்க விரும்புகிறீர்களா அல்லது தனிப்பட்ட உரையாடலை விரும்புகிறீர்களா?
4. இப்போது உங்களால் மனம் திறந்து பேச முடியுமா?

## இணையவழி துன்புறுத்தலை குழந்தை வெளிப்படுத்தியபின் செய்ய வேண்டியவை

இணையவழி குற்றங்கள் குறித்துப் பின்வரும் இணைய தளத்தில் (Portal) புகார் அளிக்கலாம்.

தேசிய இணைய குற்றங்கள் குறித்து புகார் அளிப்பதற்காக "தேசிய சைபர் குற்ற அறிக்கையிடல் வலைதளம்" (National cyber crime reporting portal) இந்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இது குழந்தைகள், பெண்களுக்கு எதிரான இணையவழி குற்றங்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்க இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பாகும். இதில் யார் ஒருவரும் பெயர் குறிப்பிடாமல் எந்த குழந்தைக்கும் நிகழ்ந்த துன்புறுத்தலைக் குறித்து விவரமாக புகார் அளிக்கலாம். மேலும் இது சார்ந்த தொடர்நடவடிக்கைகளைப் பின்தொடர்ந்து கண்காணிக்கவும் இயலும். இந்த இணையத் தொடரை https://cybercrime.gov.in/ என்ற லிங்கைப் பயன்படுத்தி தொடர்பு கொள்ளலாம்.



CSA_Module.indd 16 11/25/2024 2:25:56 PM

4

# குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களைக் கையாளுபவர்களுக்கான விழிப்புணர்வு



## பெற்றோர்களின் பங்கு

குழந்தைகளின் வாழ்வில் பெற்றோர்கள் இன்றியமையாத அங்கமாக உள்ளனர். குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். பாலியல் துன்புறுத்தல் சார்ந்த நிகழ்வுகளுக்குத் தீர்வு காண்பதிலும் தடுப்பு முறைகளிலும் அவர்களைப் பங்கேற்க செய்ய வேண்டும். இதன் வாயிலாக குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பான சூழலை வழங்கவும் குழந்தைகள் தங்களுக்கு ஏற்பட்ட விரும்பத்தகாத தொடுதல் அல்லது நிகழ்வை வெளிப்படுத்தும் போது அவர்களுக்கு உதவி புரியவும் வழிவகை செய்யும். எனவே இணையவழி பாதுகாப்பு குறித்த இன்றியமையாத தகவல்களைப் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். மேலும் நேரடியாகவோ அல்லது இணையவழியிலோ நடக்கும் அனைத்து நிகழ்வுகள் குறித்தும் உங்களிடம் பேசுவது பாதுகாப்பானது என்ற எண்ணத்தைக் குழந்தைகளிடம் உருவாக்க வேண்டும். குழந்தையின் நடத்தையில் விரும்பத்தகாத மாற்றங்கள் காணப்படுகின்றதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

### குழந்தைப் பாதுகாப்பில் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களின் பங்கு

இந்தியாவில் குழந்தைகள் ஒருநாளில் 5 முதல் 8 மணி நேரம் வரை பள்ளியில் இருக்கின்றனர். ஓர் ஆண்டில் 200 முதல் 220 நாள்கள் வரை குழந்தைகள் மற்றும் வளரிளம்பருவத்தினர் தங்கள் நேரத்தின் பெரும்பகுதியை பள்ளியிலேயே செலவழிக்கின்றனர். பிற தொழில் வல்லுநர்களைவிட ஆசிரியர்களும் கல்வியாளர்களும் குழந்தைகளுடன் நேரடி தொடர்பில் உள்ளனர் .



CSA_Module.indd 17 11/25/2024 2:25:56 PM

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலை / வன்முறையை இனம் காணவும் வெளிப்படுத்தவும் சரியான நபர்கள் ஆசிரியர்களே. அதனால், குழந்தைகள் தங்கள் மீதான பாலியல் துன்புறுத்தலை / வன்முறையை முதலில் ஆசிரியர்களிடமே வெளிப்படுத்துகின்றனர்.

**ஆசிரியர் இதனை உறுதிப்படுத்த பின்பற்ற வேண்டிய படிநிலைகள்:**

| பரிந்துரை 1: | பரிந்துரை 2: | பரிந்துரை 3: |
|---|---|---|
| ஆசிரியர் மாணவர்களிடம் நம்பகத்தன்மை உடையவராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள், தங்களுடைய சிக்கல்களையும் கவலைகளையும் தயக்கமின்றி ஆசிரியருடன் பகிர்ந்துகொள்வர். | குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல், சுரண்டல் மற்றும் வன்கொடுமை செய்யப்பட்டதற்கான அறிகுறிகள் குழந்தைகளிடம் தென்படுகின்றனவா என கவனித்தல். | குழந்தைகள் தங்களுக்கு உதவக்கூடிய சமுதாய அமைப்புகளுடன் இணக்கமான நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள உதவுதல். எ.கா: காவல் நிலையம், மருத்துவமனை, குழந்தைகள் நலக்குழு. |

ஆசிரியர்கள் மாணவர்களுடன் தகவல் பரிமாற்றத்திற்கான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவும் சில உத்திகள்:

1. **குழந்தைகளுடன் உரையாடுதல்:** மாணவர்களைப் பற்றிய புரிதலை ஏற்படுத்திக் கொள்ள அவர்களுடைய வீட்டுச் சூழல் பற்றி கலந்துரையாட வேண்டும்.

2. **குழந்தைகள் தங்கள் எண்ணங்களைப் பாதுகாப்பாக பகிர்ந்துகொள்ள தனியாக நேரம் ஒதுக்குதல்.** மாணவர்கள் தங்கள் கருத்துகளைப் பேச, சுழற்சி முறையில் நேரம் ஒதுக்குதல், நாட்குறிப்பு எழுதுதல், ஆசிரியருக்குக் கடிதம் எழுதுதல். இவற்றை மாணவர்கள் தம் கருத்தை ஆசிரியருக்கு தெரியப்படுத்த ஏற்ற அணுகுமுறைகளாக கையாளலாம்.

3. **பள்ளி அளவில் மாணவர் குழு அமைத்தல்.**

தமிழக அரசின் அரசாணை எண் 83- இன் படி ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழு (Student Safeguarding Advisory Committee - SSAC) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவினரிடம் பள்ளி மாணவர்கள் தங்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தலைக் குறித்து பகிர்ந்து கொள்ளலாம்.

## அறிகுறிகளை உற்றுநோக்குதல்

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல், பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் வன்கொடுமை போன்றவற்றிற்கான அறிகுறிகள் அவர்களிடம் வெளிப்படுகின்றனவா என கவனித்தல்.

- உளவியல்சார் அறிகுறிகள்
- உடல்சார் அறிகுறிகள்
- நடத்தைசார் அறிகுறிகள்

| உளவியல்சார் அறிகுறிகள்: | உடல்சார் அறிகுறிகள் | நடத்தைசார் அறிகுறிகள் |
|---|---|---|
| ⅄ தனிமைப்படுத்திக் கொள்வர்.<br>⅄ வழக்கத்திற்கு மாறாக தங்கள் கருத்தை வெளிப்படுத்தாமல் இரகசியம் காப்பர்.<br>⅄ ஆளுமை மாற்றம், மனவெழுச்சி மாற்றம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வுடன் காணப்படுவர்.<br>⅄ ஒரு குறிப்பிட்ட இடத்தையோ, மக்களையோ பற்றிய அதிக பயத்துடன் காணப்படுவர்.<br>⅄ அதிக கோபத்தை வெளிப்படுத்துவர். | ⅄ உடலின் பல பாகங்களில் வலி மற்றும் காயங்கள் தென்படுதல்.<br>⅄ தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்ளுதல்<br>⅄ சிறுநீர் கழிக்கும்போதோ குடல் இயக்கத்தின் போதோ நிலையாகவும் விட்டுவிட்டும் வலி ஏற்படுதல்.<br>⅄ கழிப்பறையைப் பயன்படுத்தும் பயிற்சியும் பழக்கமும் இருந்தபோதிலும், திடீரென இருந்த இடத்திலேயே சிறுநீர்கழித்தல், மலம்கழித்தல்.<br>⅄ சிறுகுழந்தை போன்று நடந்து கொள்ளுதல் (எடுத்துக்காட்டு: விரல் சூப்புதல்)<br>⅄ உணவுப்பழக்கத்தில் மாற்றம் | ⅄ குறிப்பிட்ட நபர்களுடன் தனித்திருக்க விருப்பமின்மை.<br>⅄ பழைய, புதிய நண்பர்களைப் பற்றி பேசுதல்<br>⅄ யாருக்கும் தெரியாமல் பணம், பரிசுப்பொருள்கள் போன்றவற்றை வைத்திருத்தல். |



**குழந்தைகளுக்கு உதவக்கூடிய சமுதாய அமைப்புகளுடன் ஆசிரியர் இணக்கமான நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளல்.**

ஆசிரியர்கள், குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களைக் கருத்தில் கொண்டு, மாணவர்களுக்கு உதவக்கூடிய உள்ளூர் அமைப்புகள் சார்ந்த அடிப்படைத் தகவல்களைத் தெரிந்து இருக்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். எ.கா: காவல் நிலையம், மருத்துவமனை, குழந்தைகள் நலக்குழு.

தொடர்பு கொள்ள வேண்டிய பிற உதவி எண்கள்

- கல்வித் தகவல் மையம் 14417
- குழந்தை உதவி எண் 1098.
- காவல் உதவி எண் 100

## புகார் அளிக்கும் நடைமுறைகள்:

ஆசிரியர்கள் மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப புகார் அளிக்க ஏதுவான சூழலை உருவாக்க வேண்டும்.

## பள்ளியில் இருக்க வேண்டிய வளங்கள்

மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழு – (SSAC)

மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக்குழுவை பின்வருமாறு உருவாக்க வேண்டும்.

- முதல்வர்
- 2 பெற்றோர்-ஆசிரியர் கழக உறுப்பினர்கள்



CSA_Module.indd 19 11/25/2024 2:25:56 PM

- 2 ஆசிரியர்கள் (வெவ்வேறு நிலைகளில் இருந்து)
- நிர்வாக பிரதிநிதி
- ஆசிரியரல்லாத ஊழியர்
- வெளி உறுப்பினர் (விருப்பம் இருப்பின்)

அனைத்து உறுப்பினர்களின் தகவல்களும் முழுமையாக இருத்தல் அவசியம். பள்ளியில் பெறப்பட்ட பாலியல் முறைகேடுகள் சார்ந்த புகார்கள் மற்றும் தகவல்களை ஆவணப்படுத்த மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக்குழு ஒரு பதிவேட்டைப் பராமரித்தல் வேண்டும்.

## சுவரொட்டிகள்

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலைத் தடுக்கும் விழிப்புணர்வு சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துதல். பள்ளி வளாகத்தில் “புகார் பெட்டியை” வைத்து அதில் வரும் புகார்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

SSAC - இன் நடைமுறையின்படி குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல். மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

## புகார் அளிக்கும் வழிமுறைகள்

பள்ளியில் குழந்தைகள் பாதுகாப்பிற்காக பின்பற்றவேண்டிய நெறிமுறைகளைத் தமிழ்நாடு அரசு வரையறுத்துள்ளது. குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலைக் குறித்த புகார் பின்வருமாறு பெறப்படலாம்.

| நிகழ்வு-1: | நிகழ்வு 2: | நிகழ்வு 3 | நிகழ்வு 4 |
|---|---|---|---|
| பெற்றோர்கள் தகவல்களைப் பகிர்தல் | புகார் பெட்டியின் வழியாக தகவல் பெறுதல் | ஆசிரியர் அல்லது முதல்வரிடம் நேரடியாக கூறுதல் | தனிப்பட்ட நபர் மாநில அளவிலான தலைமை புகார் மையத்தில் தன் பிரச்சனையைத் தெரிவித்தல் |

| நிகழ்வு–1 |
|---|
| பெற்றோர்கள் தகவல்களைப் பகிர்தல் |
| பெற்றோர் → காவலர் → பள்ளி முதல்வர் |
| முக்கியத்துவத்தின் அடிப்படையில் பள்ளி முதல்வர் தகவல் தெரிவிக்க வேண்டியவர்கள் |
| மாவட்டக் கல்வி அலுவலகம் (DEO) |
| மாநில அளவிலான தலைமை புகார் மையம் (Central Complaint Centre – CCC) |



CSA_Module.indd 20 11/25/2024 2:25:56 PM

| நிகழ்வு 2 |
|---|
| புகார் பெட்டி வழியாக பெறப்படும் தகவல் |
| SSAC குழுவின் இரண்டு உறுப்பினர்களால் திறக்கப்படுதல் |
| மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில் உள்ள தலைமை ஆசிரியர் மற்றும் இரண்டு பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் முன்னிலையில் புகார் பெட்டியைத் திறக்க வேண்டும். |
| புகார் பெட்டியில் போடப்பட்டிருக்கும் ஒவ்வொரு புகார் கடிதத்திற்கும் எண்ணிட்டு கவனமுடன் கையாள வேண்டும். ஒவ்வோர் புகார் கடிதத்திற்கும் தீர்வு காண மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளைத் தேதியுடன் பதிவேட்டில் குறித்து வைக்க வேண்டும். |
| தலைமையாசிரியர் / முதல்வர் / SSAC<br>↓ ↓ ↓<br>BEO/DEO/ CEO CCC குடும்பத்தினருக்குத்தெரிவித்தல் |

| நிகழ்வு 3 |
|---|
| ஆசிரியர் அல்லது முதல்வரிடம் நேரடியாகத் தெரிவித்தல். |
| எவரேனும் ஒரு நபர் / குழந்தை / குடும்பம் → தலைமையாசிரியர் / முதல்வர் → மாவட்டக் கல்வி அலுவலர் → மாநில அளவிலான மத்திய புகார் மையம் (CCC) → காவலர் → குடும்பத்தினருக்குத் தெரிவித்தல் |

| நிகழ்வு 4 |
|---|
| **தனிநபர் ஒருவர் மாநில அளவிலான தலைமை புகார் மையத்தில் நேரடியாக புகார் அளித்தல்** |
| முக்கியத்துவத்தின் அடிப்படையில் தலைமையாசிரியர் தகவல் தெரிவிக்க வேண்டியவர்கள் |
| அனைத்துவகை பள்ளிகள் |
| முதன்மைக் கல்வி அலுவலர் |
| மாவட்டக் கல்வி அலுவலர் |
| வட்டாரக் கல்விஅலுவலர் |
| தலைமை ஆசிரியர் / முதல்வர் |
| பள்ளிப் பாதுகாப்பு ஆலோசனைக்குழு |
| காவலர் |
| குழந்தையின் குடும்பம் |

## செய்யக்கூடியவை

தலைமையாசிரியர் / முதல்வர், பள்ளிப் பாதுகாப்பு மற்றும் ஆலோசனைக் குழுவிடம் பாலியல் துன்புறுத்தல் குறித்த புகாரை அளிக்கும்போது குழுவில் குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களாவது இருக்க வேண்டும். பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட நபர் தலைமை ஆசிரியராகவோ அல்லது முதல்வராகவோ இருப்பின் மாநில அளவிலான தலைமை புகார் மையம், கல்வித்துறையில் அப்பள்ளி சார்ந்த உயர் அலுவலர்களுக்கு மேல்நடவடிக்கை எடுப்பதற்காக தகவலைத் தெரிவிக்க வேண்டும். மீண்டும் பாலியல்



CSA_Module.indd 21 11/25/2024 2:25:56 PM

துன்புறுத்துதல் நடைபெறுதலைத் தவிர்க்க காவலரின் விசாரணையைத் தவிர பிறவிசாரணைகளை ஒருங்கிணைத்து ஒரே ஒருமுறை மட்டுமே விசாரணை மேற்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டு: பள்ளி மற்றும் உயர் அலுவலர்கள். காவல் துறைக்கு அளிக்கப்படும் எந்த ஒரு தகவலும் குறிப்பிட்ட படிவத்தில் தான் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

## செய்யக்கூடாதவை

- குற்றச்சாட்டைக் காவல்துறையினர் மட்டுமே விசாரிக்க வேண்டுமே தவிர பள்ளி நிர்வாகம் விசாரிக்கக் கூடாது.
- காவலர் சீருடை அணிந்து பள்ளிவளாகத்திற்குள் நுழையக்கூடாது.
- எந்த ஒரு பள்ளியும் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு முதலில் தெரிவிக்காமல் பள்ளி வளாகத்திற்குள் மாணவரை விசாரிக்க காவல்துறையை அனுமதிக்கக் கூடாது.
- இயன்றவரை பெற்றோர் அல்லது பாதுகாவலர் முன்னிலையில் தான் விசாரணை மேற்கொள்ள வேண்டும். பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் இருந்து எழுத்துப்பூர்வ அனுமதி பெற்ற பின்னரே விசாரணை மேற்கொள்ள வேண்டும்.
- பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு குறித்து பள்ளி எந்த ஊடகத்திற்கும் தகவல் தெரிவிக்கக்கூடாது.

ஓர் ஆசிரியர், குழந்தைகளின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முக்கிய பங்காற்றுகிறார். அவர் தன் வகுப்பிலுள்ள பாதிக்கப்பட்ட குழந்தையின் வாழ்க்கையில் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும், முன்மாதிரியாகவும் நண்பராகவும் வழிகாட்டியாகவும் திகழ வேண்டும். அவ்வாறு இருப்பின் மாணவர்கள் ஆசிரியர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வர்.



CSA_Module.indd 22 11/25/2024 2:25:56 PM